9. விதி 110–ன்கீழ் அறிக்கை

கடல் மீனவர்களுக்கான தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் குறித்து மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம். இராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு மற்றும் மத்திய அரசு சம அளவில் பங்கேற்கும் கடல் மீனவர்களுக்கான தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் 1991–1992 ஆம் ஆண்டு முதல் தேசிய நலத் திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி கடல் மீனவர்கள் மீன்பிடி காலமான ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய மொத்தம் 8 மாதங்களுக்கு மாதச் சந்தாத் தொகை 75 ரூபாயை ஒவ்வொரு கடல் மீனவரும் செலுத்த வேண்டும். இதன்மூலம் மொத்தம் 8 மாதங்களுக்கு கடல் மீனவர் ஒவ்வொருவரும் மொத்தமாக 600 ரூபாய் சந்தாத் தொகையாக செலுத்துகின்றனர். இந்தத் தொகைக்கு மேல் இத்திட்டத்தில் சேர்ந்த ஒவ்வொரு கடல் மீனவருக்கும் மத்திய அரசு 300 ரூபாயும், மாநில அரசு 300 ரூபாயும் செலுத்தி மொத்தம் 1200 ரூபாயை ஒவ்வொரு கடல் மீனவருக்கும் மீன் பிடிப்புக் குறைவாக உள்ள செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மாதத்திற்கு 300 ரூபாய் என வழங்கப்படும். இந்தத் திட்டத்தின்கீழ் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய 10 கடலோர மாவட்டங்களிலுள்ள மொத்தம் 1 இலட்சத்து 39 ஆயிரம் கடல் மீனவர்கள், 8 கோடியே 11 இலட்சத்து 31 ஆயிரத்து 25 ரூபாய் சந்தாத் தொகையாகச் செலுத்தியுள்ளார்கள். மத்திய அரசு 4 கோடியே 5 இலட்சத்து 65 ஆயிரத்து 512 ரூபாய் மற்றும் 50 காசுகளும் தமிழ்நாடு அரசு 4 கோடியே 5 இலட்சத்து 65 ஆயிரத்து 512 ரூபாய் மற்றும் 50 காசுகளும் ஆக மொத்தம் 16 கோடியே 22 இலட்சத்து 62 ஆயிரத்து 50 ரூபாய் வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு*

உத்தரவிட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 10 கடலோர மாவட்டங்களில் இந்தத் திட்டத்தில் சேர்ந்துள்ள மொத்தம் ஒரு இலட்சத்து 39 ஆயிரம் கடல் மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் 1200 ரூபாய் உடனடியாக வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உத்தரவிட்டுள்ளது என்கிற நல்ல செய்தியை உங்களிடம் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மீன் பிடிப்புக் காலம் இன்னும் முடிவுபெறவில்லை. இந்த மூன்று மாவட்டங்களில் முடிவுபெறாத காலங்களுக்கான சந்தாத் தொகையினை கடல் மீனவர்கள் இன்னும் செலுத்த வேண்டியுள்ளது. எனவே திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த கடல் மீனவர்களுக்கான தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் மீன்பிடிப்பு குறைவாக உள்ள காலத்திற்கான நிவாரணத் தொகை வழங்குவது சம்பந்தமாக பின்னர் தனியாக அறிவிக்கப்படும்.

முற்பகல் 10-40

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2002). பேராசிரியர் க. அன்பழகன், திரு. துரை முருகன், டாக்டர் க. பொன்முடி, திருவாளர்கள் இ. புகழேந்தி, எ.வ. வேலு, எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சி. ஞானசேகரன், கு. ஜெயக்குமார், திருமதி எஸ். மகேஸ்வரி, திரு. ஜி.கே. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி ஆகியோரில் ஒருவர் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிவர்:

"5-10-2002 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2002) இப்பேரவை நிராகரிக்கின்றது."